செ.வெ.எண்.59 நாள்: 22.09.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 2 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டிரில்லர் 4 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.09.2017) நடைபெற்றது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது: -

விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பருவ மழை இம்மாதம் இயல்பான அளவைக்காட்டிலும் அதிக அளவு கிடைக்கப்பெற்றதால் அணைகளில் ஓரளவு தண்ணீர் இருப்பு உள்ளது. திருநெல்வேலி மாவட்ட அணைகளில் கடந்த ஆண்டு இதே காலத்தில் 8.42 சதவீத நீர் இருப்பு இருந்தது. தற்போது அணைகளில் 29.1 சதம் நீர் இருப்பு உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 61 குளங்களில் ஒரு மாத தேவைக்கான நீர் இருப்பு உள்ளது. விவசாயிகளுக்கு ராபி பருவ பயிர் சாகுபடிக்கு தேவையான உரம் மற்றும் விதைகளும் தேவையான அளவு இருப்பில் உள்ளது. கடந்த மாதம் வரை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 355 மனுக்களில் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 182 மற்றும் வேளாண்மை சாராத 173 மனுக்களுக்கும் பதில்கள் பெறப்பட்டு விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2016-2017-ம் ஆண்டு இராபி பருவத்தில் நெற்பயிருக்கு பிரிமீயம் செலுத்தி, நாற்றுப்பாவி நடவு செய்ய இயலாமல் போன 7,613 விவசாயிகளுக்கு ரூ.6.058 கோடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 1023 விவசாயிகளுக்கு ரூ.1.228 கோடி இழப்பீடு தொகை விடுவிக்கப்பட்டு விவசாயகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கபடமால் உள்ளது. ICICI லம்பார்டு நிறுவன பிரதிநிதிகளிடம் நேரடியாக நெற்பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகையினை விரைவில் வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் இழப்பீட்டு தொகை பெறப்பட்ட பயனாளிகளின் பட்டியல், விவசாயிகளின் நேரடி பார்வைக்காக அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வெளியிட இணையபதிவாளர் கூட்டுறவு துறை அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நெற்பயிற் தவிர இதர இராபி பயிர்களான மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களுக்கான மகசூல் விபரம் இயக்குநர், புள்ளியில் துறை மூலம் பெற்ற விரைவில் இழப்பீட்டு தொகை உரிய விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய தனியார் நிறுவனங்கள் காப்பீடு தொகையை விரைவில் சரிவர வழங்கமால் உள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற பயிர் காப்பீட்டு நிறுவனத்தினை நமது மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கை பரிந்துரை செய்யப்பட்டு வேளாண்மை இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பபட்டுள்ளது. கூட்டு பண்ணை திட்டத்தின் 60 வயதுக்கு கீழ் உள்ள விவசாயிகளை சேர்க்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் அதிக அளவில் விவசாய பணிகள் செய்கிறார்கள். எனவே வயது வரம்பை தளர்த்த வேண்டுமென்ற கோரிக்கையினை ஏற்று வயது வரம்பினை நீக்கி அனுமதி வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பபட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டும் என தெரிவித்தார். முன்னதாக தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் மூலம் அமைக்கப்பட்ட காண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். 2 விவசாயிகளுக்கு மானிய விலையிலான பவர் டிரில்லர்களையும், 4 நபர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பாசுந்தீவணங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலாட் திரு.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கண்ணன், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.